**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், ஆத்தூர்**
**முன்னிலை திரு.C. உதயசுந்தரம்.,பி.ஏ., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்–2, ஆத்தூர்.**

2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 08ம் நாள் புதன்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 202/2024</u>**

**(CNR No) TNSA140024322024**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | அரசு சார்பாக – காவல் உதவி ஆய்வாளர்,<br>அனைத்து மகளிர் காவல் நிலையம்,<br>ஆத்தூர்.<br>குற்ற எண்.21/2022. |
| // எதிர் // | | |
| எதிரிகள் | – | 1) பெரியசாமி (38/2024),<br>த/பெ. மாணிக்கம் .<br>2) மாணிக்கம் (எ) ராஜமாணிக்கம் (55/2024),<br>த/பெ. சிவக்குமார்.<br>3) மல்லிகா (57/2024),<br>க/பெ. மாணிக்கம்.<br>4) பாரதிராஜா (33/2024),<br>த/பெ. மாணிக்கம்.<br>5) பிரியா (35/2024),<br>த/பெ.மாணிக்கம்.<br>6) மாணிக்கம் (60 /2024),<br>த/பெ. வெள்ளைய கவுண்டர்.<br>7) பூமணி (52/2024),<br>த/பெ. மாணிக்கம். |
| குற்றம் சாட்டப்பட்டது | – | எதிரிகளின் மீது இதச பிரிவுகள் 498(A), 323, 324, 494, 109, 506(1)–ன் கீழும், |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | – | 1ம் எதிரி பெரியசாமி ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 324, 506(1), 494, 494 r/w 109–ன் படியும், 2ம் எதிரி மாணிக்கம்(எ) ராஜமாணிக்கம் ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 323, 506(1), 494 r/w 109–ன் படியும், 3ம் எதிரி மல்லிகா ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), |

| | | |
|---|---|---|
| | | 506(1), 494 r/w 109–ன் படியும், , 4ம் எதிரி பாரதிராஜா ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 494 r/w 109–ன் படியும், 5ம் எதிரி பிரியா ஆகிய உம் மீது இதசபிரிவு 494–ன் படியும், 6ம் எதிரி மாணிக்கம் ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 494 r/w 109–ன் படியும், 7ம் எதிரி பூமணி ஆகிய உம் மீது இதசபிரிவு 494 r/w 109–ன் படியும் |
| தீர்மானம் | – | இறுதியாக, எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 498(A), 323, 324, 494, 109, 506(1)–ன் கீழான குற்றச்சாட்டு எதுவும் இந்நீதிமன்றத்தில் சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத் தரப்பில் நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிப்பது என முடிவுசெய்து 1ம் எதிரி பெரியசாமி ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 324, 506(1), 494, 494 r/w 109–ன் படியும், 2ம் எதிரி மாணிக்கம்(எ) ராஜமாணிக்கம் ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 323, 506(1), 494 r/w 109–ன் படியும், 3ம் எதிரி மல்லிகா ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 506(1), 494 r/w 109–ன் படியும், , 4ம் எதிரி பாரதிராஜா ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 494 r/w 109–ன் படியும், 5ம் எதிரி பிரியா ஆகிய உம் மீது இதசபிரிவு 494–ன் படியும், 6ம் எதிரி மாணிக்கம் ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 494 r/w 109–ன் படியும், 7ம் எதிரி பூமணி ஆகிய உம் மீது இதசபிரிவு 494 r/w 109–ன் படியும் அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் கீழ் அவர்கள் குற்றவாளிகள் இல்லையென தீர்மானித்து எதிரிகளை 248 (1) Cr.P.C–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| புகார் நாள் | – | 19.07.2022 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | – | A1–A3–07.04.2022, A4–A7–08.04.2022 |

| | | |
|---|---|---|
| பிணையில் சென்ற நாள் | – | A1–A3–13.04.2022, A4–A7–24.08.2022 |
| கோப்பு நாள் | – | 24.06.2024 |
| விசாரணை தொடங்கப்பட்ட நாள் | – | 25.09.2025 |
| விசாரணை முடிக்கப்பட்ட நாள் | – | 14.05.2026 |
| தீர்ப்புரை நாள் | – | 08.07.2026 |

எதிரிகளின் மீதான இந்த வழக்கானது இந்நீதிமன்ற கோப்பிற்கு கடந்த 24.06.2024 ம் தேதி எடுத்துக் கொள்ளப்பட்டது. அரசுத்தரப்பில் அறிவார்ந்த அரசு குற்றத்துறை வழக்குரைஞர் நிலை– 2 அவர்களும், எதிரிகள் தரப்பில் அறிவார்ந்த வழக்குரைஞர். திருவாளர்.R.ரவி அவர்கள் ஆஜராகி எடுத்துரைக்க இவ்வழக்கின் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இருதரப்பு எடுத்துரைத்ததைக் கேட்டும் இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

1) வாதி விமலா மற்றும் அவரது கணவர் மற்றும் கணவரின் குடும்பத்தாருக்கும் இடையே விமலா சீர்வரிசை கொண்டுவரவில்லை என்று சொல்லி அடிக்கடி சண்டை வந்ததால், வாதியும், 1ம் எதிரி பெரியசாமியும், தனிக்குடித்தனம் இருந்து வந்துள்ளார்கள். பின்பு கடந்த 20.09.2018ம் தேதி வாதி விமலா, அவரது அம்மா லட்சுமிக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் அவரை பார்க்க சென்ற விமலாவை, அவரது கணவர், அவரது பெற்றோரின் தூண்டுதலால் விமலாவை அடிக்கவைத்துள்ளார்கள். பின்பு ஒருவார காலத்தில் 1 முதல் 3 எதிரிகள் சேர்ந்து வாதியை கொடுமை செய்துள்ளார். மீண்டும் கடந்த 06.11.2018ம் தேதி விமலாவின் குழந்தையை பார்க்க வந்த, சாட்சிகள் லட்சுமி, விக்னேஷ் ஆகீயோர்களை 1 முதல் 4 எதிரிகள் விறகு கட்டையால் அடித்துள்ளார்கள். பின்பு வாதி விமலா அவரது அம்மா வீட்டில் இருந்த சமயத்தில் 2021ம் ஆண்டில், 5ம் எதிரி பிரியாவை, 2 முதல் 4 மற்றும் 6, 7 ஆகிய எதிரிகளின்

துணையுடன் 1ம் எதிரிக்கு சட்டத்திற்கு முரணான வகையில் திருமணம் செய்து வைத்து, 1ம் எதிரியும், 5ம் எதிரியும் குடும்பம் நடத்தி, அவர்களுக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. இதனால் வாதிக்கும், 1ம் எதிரிக்கும் ஆத்தூர், சார்பு நீதிமன்றத்தில் HMOP No.40/2022–ல் கடந்த 17.03.2023ம் தேதி சட்டப்படி விவாகரத்து ஏற்பட்டுள்ளது. மேற்படி வழக்கு சங்கதிகளின் அடிப்படையில் வாதியின் கணவரான 1ம் எதிரி பெரியசாமி, 2ம் எதிரி ராஜமாணிக்கம், 3ம் எதிரி மல்லிகா, 4ம் எதிரி பாரதிராஜா ஆகீயோர்கள் சேர்ந்து, வாதி விமலாவை அடித்து, உதைத்து இறுதியாக கடந்த 06.11.2018ம் தேதி காலை 09.30 மணிக்கு கையாலும், விறகு கட்டையாலும் விமலாவின் இடது கால் முட்டியிலும், இடது காதிலும், முதுகிலும் அடித்து காயத்தை ஏற்படுத்தி கொடுமை படுத்தியுள்ளார்கள் என்றும், 1 முதல் 3 வரையிலான எதிரிக்ளி வாதி விமலாவை வீட்டை விட்டு வெளியேற்றும் வன்னம் கொலை செய்து விடுவதாக மிரட்டியுள்ளார்கள் என்றும், 1ம் எதிரி பெரியசாமி கடந்த 06.11.2018ம் தேதி காலை 09.30 மணிக்கு அவரது மனைவியான வாதி விமலாவை விறகு கட்டையால் இடது கால் முட்டியில் தாக்கியுள்ளார் என்றும், 2ம் எதிரி ராஜமாணிக்கம் என்பவர் சாட்சி லட்சுமியை கடந்த 06.11.2018ம் தேதி காலை 09.30 மணிக்கு அவரது தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டு இடது கை முடடியிலும், வலது கால் முட்டியிலும் சொற்பகாயத்ததை ஏற்படுத்தியுள்ளார் என்றும், 1ம் எதிரி பெரியசாமிக்கும், வாதி விமலாவிற்கும் 08.06.2016ம் தேதி நடந்த திருமணபந்தம் அமலில் உள்ளபோது, 1ம்மி எதிரி பெரியசாமி மற்றும் 5ம் எதிரி பிரியா ஆகியோர் சட்ட முரணாக 29.08.2021ம் தேதி திருமணம் செய்து, குடும்பம் நடத்தி குழந்தை பெற்றுள்ளார்கள் என்றும், 1 மற்றும் 5ம் எதிரிகளின் திருமணத்திற்கு 2 முதல் 4, 6, 7 எதிரிகள் உடந்தையாக இருந்துள்ள குற்றத்திற்காக 1ம் எதிரி பெரியசாமி ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 324, 506(1), 494, 494 r/w 109–ன் படியும், 2ம் எதிரி மாணிக்கம்(எ) ராஜமாணிக்கம் ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 323, 506(1), 494 r/w 109–ன் படியும், 3ம் எதிரி மல்லிகா ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 506(1), 494 r/w 109–ன் படியும், , 4ம் எதிரி பாரதிராஜா ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 494 r/w 109–ன் படியும், 5ம்

எதிரி பிரியா ஆகிய உம் மீது இதசபிரிவு 494—ன் படியும், 6ம் எதிரி மாணிக்கம் ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 494 r/w 109—ன் படியும், 7ம் எதிரி பூமணி ஆகிய உம் மீது இதசபிரிவு 494 r/w 109—ன் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக ஆத்தூர், அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் எதிரிகள் மீது ஒரு குற்ற அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

2) குற்ற இறுதி அறிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் சார்ந்திருக்கும் வழக்காவணங்கள் மற்றும் வாக்குமூலங்களின் நகல்கள் கட்டணமின்றியும் காலதாமதமின்றியும் குவிமுச பிரிவு 207—ன்படி எதிரிக்கு வழங்கப்பட்டது.

3) எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டது. எதிரிகளிடம் குற்றம் பற்றி வினவ எதிரிகள் தங்கள் மீதான இதச பிரிவுகள் 498(A), 323, 324, 494, 109, 506(1)—ன் படியும் குற்றங்களை மறுத்தார்கள். வழக்காவணங்களை பரிசீலனை செய்த பின்பும் இருதரப்பு எடுத்துரைத்ததைக் கேட்டபின்பும் 1ம் எதிரி பெரியசாமி ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 324, 506(1), 494, 494 r/w 109—ன் படியும், 2ம் எதிரி மாணிக்கம்(எ) ராஜமாணிக்கம் ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 323, 506(1), 494 r/w 109—ன் படியும், 3ம் எதிரி மல்லிகா ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 506(1), 494 r/w 109—ன் படியும், , 4ம் எதிரி பாரதிராஜா ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 494 r/w 109—ன் படியும், 5ம் எதிரி பிரியா ஆகிய உம் மீது இதசபிரிவு 494—ன் படியும், 6ம் எதிரி மாணிக்கம் ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 494 r/w 109—ன் படியும், 7ம் எதிரி பூமணி ஆகிய உம் மீது இதசபிரிவு 494 r/w 109—ன் படியும் குற்றச்சாட்டுகள் வனைந்து தமிழில் விளக்கிக் கூறி வினவ எதிரிகள் அக்குற்றச்சாட்டினையும் மறுத்தார்கள்.

4) எனவே அரசுத்தரப்பில் எதிரிகள் மீதான வழக்கை நிரூபிக்கும் விதமாக அ.த.சா.1 முதல் அ.த.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்களும், குறியீடு செய்யப்பட்டது.

**5) அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்_பின்வருமாறு**

இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.த.சா.1 முதல் அ.த.சா.4 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் புகார் வாக்குமூலம் கொடுத்த அ.த.சா.1 செல்வராஜ் இவ்வழக்கில் புகார் கொடுத்தது பற்றியும், சம்பவத்தை பற்றியும், மேலும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான அ.த.சா.2 லட்சுமி, அ.த.சா.3 விக்னேஷ் ஆகியோர்கள் சம்பவத்தில் தங்களுக்கு ஏற்பட்ட காயம் பற்றியும், சம்பவத்தை பற்றியும், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியான அ.த.சா.4 பூங்கொடி அவர்கள் இவ்வழக்கில் மேல்விசாரணை மேற்கொண்டு 1ம் எதிரி பெரியசாமி ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 324, 506(1), 494, 494 r/w 109-ன் படியும், 2ம் எதிரி மாணிக்கம்(எ) ராஜமாணிக்கம் ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 323, 506(1), 494 r/w 109-ன் படியும், 3ம் எதிரி மல்லிகா ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 506(1), 494 r/w 109-ன் படியும், , 4ம் எதிரி பாரதிராஜா ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 494 r/w 109-ன் படியும், 5ம் எதிரி பிரியா ஆகிய உம் மீது இதசபிரிவு 494-ன் படியும், 6ம் எதிரி மாணிக்கம் ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 494 r/w 109-ன் படியும், 7ம் எதிரி பூமணி ஆகிய உம் மீது இதசபிரிவு 494 r/w 109-ன் படியும் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தது தொடர்பாகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

6) அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக அமைந்துள்ள சாட்சியப் பகுதிகளை குவிமுச 313(1)(ஆ)-ன் கீழ் விளக்கிக் கூறி கேள்வி கேட்க எதிரிகள் தங்கள் மீதான சாட்சியத்தை மறுத்தார்கள். இது தங்கள் மீது போடப்பட்ட பொய் வழக்கு என்றும், தங்கள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்றார்கள். இத்துடன் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**7) அரசுத்தரப்பு வாதம் பின்வருமாறு.**

அரசுதரப்பு வழக்கறிஞர் நிலை -2 அவர்கள் அ.த.சா.1 முதல் அ.த.சா.4

வரையிலான சாட்சியங்கள் மற்றும் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.13 வரையிலான சாண்றாவணங்களிலிருந்து 1ம் எதிரி சிவக்குமார், 2ம் எதிரி செல்வராணி ஆகியோர்கள் மீது இதச பிரிவுகள் 294 (பி), 506(1)–ன் படியும், 3ம் எதிரி தாமரைச்செல்வன் மீது இதசபிரிவுகள் 294(பி), 323(2 Counts), 324 (3 counts), 506(1)–ன் படியும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது. அதனால் அவர்கள் தண்டிக்கத்தக்கப்படவேண்டியவர்கள் என்று வாதிட்டார்கள்.

8) ஆனால், எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், எதிரிகள் குற்றவாளி இல்லை என்றும், மேற்படி வழக்கின் சம்பவம் நடைபெறவில்லை என்றும், எதிரிகள் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் அரசுத்தரப்பு சாட்சிகள் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எனவே எதிரிகளை விடுதலை செய்யவேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

9) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால் 1ம் எதிரி பெரியசாமி ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 324, 506(1), 494, 494 r/w 109–ன் படியும், 2ம் எதிரி மாணிக்கம்(எ) ராஜமாணிக்கம் ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 323, 506(1), 494 r/w 109–ன் படியும், 3ம் எதிரி மல்லிகா ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 506(1), 494 r/w 109–ன் படியும், , 4ம் எதிரி பாரதிராஜா ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 494 r/w 109–ன் படியும், 5ம் எதிரி பிரியா ஆகிய உம் மீது இதசபிரிவு 494–ன் படியும், 6ம் எதிரி மாணிக்கம் ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 494 r/w 109–ன் படியும், 7ம் எதிரி பூமணி ஆகிய உம் மீது இதசபிரிவு 494 r/w 109–ன் படியும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்.

10) இவ்வழக்கின் புகார்தாரரான அ.த.சா.1 விமலா அவர்களது சாட்சியத்தில் கடந்த 08.06.2016 அன்று எனக்கும், எனது கணவர் பெரியசாமிக்கும் பெரியவர்களால் பேசி

திருமணம் செய்துவைக்கப்பட்டது என்றும், பின்னிட்டு ஒரு வருட காலம் நானும், எனது கணவர் பெரியசாமியும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தோம் என்றும், அதன் பயனாக எனக்கு ஒரு குழந்தை பிறந்தது என்றும், அதற்கு பின்னிட்டு எனது கணவருக்கும், எனக்கும் இடையே அடிக்கடி கருத்துவேறுபாடு ஏற்பட்டு சண்டை சச்சரவுகள் நடக்கும். அதை நான், எனது மாமனார், மாமியாரிடமும், எனது கணவரின் உறவினர்களிடமும் தெரிவித்தேன் என்றும், எனது கணவருக்கு அறிவுரை கூறாமல், என்னிடம்தான் அறிவுரை கூறினார்கள் என்றும், அதனால் எனது கணவரின் குடும்பத்தாரிடமிருந்து ஒரு சுமூகமான வாழ்க்கை வாழமுடியவில்லை என்றும், அதற்கு பின்னிட்டு நான் எனது கணவரிடமிருந்து பிரிந்து வாழ்ந்து வந்தேன் என்றும், எனது கணவர், வேறொரு திருமணம் செய்துகொண்டாரா என்று எனக்கு தெரியாது என்றும், அதனால்தான் எனது கணவர் மற்றும் கணவரின் உறவினர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும், அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் நீதிமன்றத்தில் முறையீடு செய்து, நீதிமன்ற உத்தரவின் பேரில் எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும், தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றும், (புகார் மனுவில் உள்ள புகார்தாரர் கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது) என்றும், அந்த புகார் மனுவில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றும் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார். அ.த.சா.1–ன் சாட்சியானது அரசு தரப்பு குற்றச்சாட்டிற்கு முரணாக சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

11) மேலும் அ.த.சா.1 விமலா அவர்களது அரசு தரப்பு குறுக்கு விசாரணையில் இவ்வழக்கு சம்பவம் குறித்து எதிரிகளுடன் சமரசமாக செல்வதாக சமரச மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அந்த சமரச மனு அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12) மேலும் அ.த.சா.1 ஐ போலவே சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான அ.த.சா.2 லட்சுமி, அ.த.சா.3 விக்னேஷ் ஆகியோர்கள் அவர்களது சாட்சியத்தில் கடந்த 08.06.2016 அன்று அ.த.சா.1 விமலாவுக்கும், 1ம் எதிரி பெரியசாமிக்கும் பெரியவர்களால் பேசி திருமணம் செய்துவைத்தோம் என்றும், பின்னிட்டு ஒரு வருட காலம் மட்டும் இருவரும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள் என்றும், அதன் பயனாக அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது என்றும், அதற்கு பின்னிட்டு இருவருக்கும் இடையே அடிக்கடி கருத்துவேறுபாடு ஏற்பட்டு சண்டை சச்சரவுகள் நடந்துள்ளது என்றும், அதை அ.த.சா.1 அவரது மாமனார், மாமியாரிடமும், அவரது கணவரின் உறவினர்களிடமும் தெரிவித்துள்ளார் என்றும், அதற்கு அவர்கள் 1ம் எதிரி பெரியசாமி அவர்களுக்கு அறிவுரை கூறாமல், எனது அ.த.சா.1க்கு அறிவுரை கூறியதாக அ.த.சா.1 எங்களிடம் கூறினார் என்றும், அதனால் இருவரும் குடும்பத்தில் ஒரு சுமூகமான வாழ்க்கை வாழமுடியவில்லை என்றும், அதற்கு பின்னிட்டு இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்தார் என்றும், 1ம் எதிரி பெரியசாமி வேறொரு திருமணம் செய்துகொண்டாரா என்று எங்களுக்கு தெரியாது என்றும், அதனால் 1ம் எதிரி பெரியசாமி மற்றும் 1ம் எதிரியின் உறவினர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி காவல் நிலையத்தில் அ.த.சா.1 புகார் கொடுத்தார் என்றும், காவல் நிலையத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் நீதிமன்றத்தில் முறையீடு செய்து, நீதிமன்ற உத்தரவின் பேரில் எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும், போலிசார், எங்களிடம் நடந்த சம்பவத்தை குறித்து விசாரணை செய்தார்கள் என்றும் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும் அ.த.சா.2 லட்சுமி, அ.த.சா.3 விக்னேஷ் ஆகியோர்கள் இவர்களது சாட்சியத்தில் அரசு தரப்பு குற்றச்சாட்டிற்கு முரணாக சாட்சியம் அளித்து பிறழ் சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளார்கள்.

13) மேலும் புலன் விசாரணை அதிகாரியான அ.த.சா.4 பூங்கொடி அவர்களது சாட்சியத்தில் கடந்த 18.07.2022ம் தேதி மனுதாரர் திருமதி.விமலா என்பவர், இந்நீதிமன்றத்தில் கொடுத்த மனுவின் பேரில் இந்நீதிமன்றம் விசாரித்து,

Crl.M.P.2554/2021, dt:11.07.2022ம் தேதி U/s.156(3) of CrPC–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு உத்தரவிட்டதின் பேரில், கடந்த 19.07.2022 அன்று பகல் 03.00 மணிக்கு ஆத்தூர், அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நிலைய அலுவலலில் இருந்த காவல் உதவி ஆய்வாளர் திருமதி.மல்லிகா என்பவர், புகார்தாரர் திருமதி.விமலாவின் கடந்த 19.07.2021ம் தேதியிட்ட புகாரினை பரிசீலித்து, அதன் அடிப்படையில் நிலைய குற்ற எண்.21/2022 ச.பி 323, 324, 498(A), 494, 506(1) இதச–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது தொடர்பாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

14) இந்நிலையில் வழக்கின் விசாரணை குறித்து அரசு தரப்பில் சாட்சியம் அளித்த அ.த.சா.1 விமலாவுக்கும், எதிரிகளுக்கும் இடையே குடும்ப பிரச்சனை சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்பதும், மேற்படி சம்பவம் தொடர்பாக எதிரிகளுக்கும் அ.த.சா.1–ற்கும் முன்விரோதம் இருந்து வருகிறது என்பதும் மேலும், அ.த.சா,1–ம், எதிரிகளும் சேர்ந்து இந்நீதிமன்றத்தில் சமரச மனு தாக்கல் செய்துள்ளதிலிருந்து இவ்வழக்கில் மேல்நடவடிக்கை எதுவும் வேண்டாம் என்று அ.த.சா.1 கருதுவதை இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது. மேலும் மேற்படி காரணங்களால் அ.த.சா.1 சாட்சியம் அளித்துள்ளபடி இவ்வழக்கு சம்பவம் நடைபெற்றதாக என்பதிலேயேயும், அ.த.சா.1 புகார் வாக்குமூலத்திலும், தனது முதல் விசாரணையிலும் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு இருப்பதை பார்க்கும்போது சம்பவம் நடைபெற்றதா என்பதிலேயே இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகிறது.

15) மேற்படி அ.த.சா.1 தன் புகார் வாக்குமூலத்திற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாலும், மேற்படி அ.த.சா.2 மற்றும் அ.த.சா.3 வரையிலானவர்கள் எதிரிகளை வழக்கு சம்பவத்துடன் இணைத்து எவ்வித சாட்சியமும் அளிக்காததாலும், அவர்களது சாட்சியம் பிறழ் சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளதாலும், அவர்களது

சாட்சியம் எதிரிகள் மீதான குற்றத்தை நிருபிக்க பயன்படுவதாக இல்லையென இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

16) மேலும் அ.த.சா.1 முதல் அ.த.சா.3 வரையிலான சாட்சிகள் புகார் வாக்குமூலத்திற்கும், அரசுதரப்பு குற்றச்சாட்டிற்கும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதை பார்க்கும்போது இவர்களது சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு எவ்வகையிலும் உதவுவதாக இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

17) இந்நிலையில் வழக்கின் விசாரணை குறித்து அரசு தரப்பில் சாட்சியம் அளித்த அ.த.சா.4 பூங்கொடி அவர்களின் சாட்சியத்தை மட்டும் நம்பி அரசு தரப்பு வழக்கு ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக எவ்வகையிலும் முடிவிற்கு வர இயலாது.

18) ஆகவே, மேற்படி சாட்சியங்களின் சாட்சியங்களை ஆராயும்போது அரசு தரப்பு வழக்கை நிருபிக்கும் வகையில் எந்த ஒரு சாட்சிகளும் சாட்சியம் அளிக்காததால், எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்குகிறது.

19) இறுதியாக, எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 498(A), 323, 324, 494, 109, 506(1)–ன் கீழான குற்றச்சாட்டு எதுவும் இந்நீதிமன்றத்தில் சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத் தரப்பில் நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிப்பது என முடிவுசெய்து 1ம் எதிரி பெரியசாமி ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 324, 506(1), 494, 494 r/w 109–ன் படியும், 2ம் எதிரி மாணிக்கம்(எ) ராஜமாணிக்கம் ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 323, 506(1), 494 r/w 109–ன் படியும், 3ம் எதிரி மல்லிகா ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 506(1),

494 r/w 109–ன் படியும், , 4ம் எதிரி பாரதிராஜா ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 498(A), 494 r/w 109–ன் படியும், 5ம் எதிரி பிரியா ஆகிய உம் மீது இதசபிரிவு 494–ன் படியும், 6ம் எதிரி மாணிக்கம் ஆகிய உம் மீது இதசபிரிவுகள் 494 r/w 109–ன் படியும், 7ம் எதிரி பூமணி ஆகிய உம் மீது இதசபிரிவு 494 r/w 109–ன் படியும் அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் கீழ் அவர்கள் குற்றவாளிகள் இல்லையென தீர்மானித்து எதிரிகளை 248(1) Cr.P.C–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

20) இவ்வழக்கில் வழக்கு சொத்தாக எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

**Particulars under rule 106 of Criminal Rules of Practice 2019.**

| Sl.No | Case No: | : | **CC 202/2024** | |
|---|---|---|---|---|
| 2. | Name of the Police Station and Crime Number of the offence | : | AWPS, Attu P.S<br>Cr.No : 21/2022<br>Offence : 498(A), 323, 324, 494, 109, 506(1) IPC. | |
| 3. | Name | : | A1-Periyasamy,<br>A2-Manickam @ Rajamanickam,<br>A3-Mallika, A4- Bharathiraja,<br>A5-Priya, A6- Manickam, A7-Poomani | Description of the Accused |
| 4. | Father's/Husband Name | : | A1-Manickam, A2- Sivakumr,<br>A3- Manickam,A4- Manickam,<br>A5- Manickam, A6- Vellaiyagounder,<br>A7-Manickam | |
| 5. | Occupation | : | A1-A7- Labourer | |
| 6. | Residence | : | A1-A4- Valashakalpatti post, Gangavalli tk, Salem dt.<br>A5-A7- Melthombai village, Attur tk, Salem dt. | |
| 7. | Age | : | A1-38/2024 , A2-55/2024,<br>A3- 57/2024, A4- 33/2024, A5-35/2024,<br>A6- 60/2024, A7-52/2024 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | Occurrence | : | 06.11.2018 | Date of |
| 9. | Complaint | : | 19.07.2021 | |
| 10. | Apprehension or appearance | : | A1-A3-13.04.2022,<br>A4-A7-24.08.2022 | |
| 11. | Release on bail | : | A1-A3-13.04.2022,<br>A4-A7-24.08.2022 | |
| 12. | Commitment | : | ---- | |
| 13. | Commencement of trial | : | 25.09.2025 | |
| 14. | Closure of trial | : | 14.05.2026 | |
| 15. | Sentence or order | : | 08.07.2026 | |
| 16. | Service of copy of judgment or finding on accused | : | Acquittal | |
| 17. | Explanation of delay | | --- | |

**CASE SUMMERY AS PER THE CIRCULAR OF HON'BLE HIGH COURT, MADRAS IN R.O.C. NO. 814/2020/RG/F1, DT. 07.04.2021**

| | | | |
|---|---|---|---|
| i | the period of remand of the accused | : | A1-A3-13.04.2022,<br>A4-A7-24.08.2022 |
| ii | the date of filing of the complaint /final report in the Court | : | 22.05.2025 |
| iii | the date of committal of the case to the Court of Session | : | --- |
| iv | the date of questioning of the accused under section 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be | : | 10.11.2025 |
| v | filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts; except routine petitions like petitions under section 317 of the Code; | : | U/s. 359 BNSS Petition is dismissed. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| vi | date of examination in-chief and cross-examination of witness | : | P.W.1 | 25.09.2025 | 25.09.2025 |
| | | | P.W.2 | 25.09.2025 | 25.09.2025 |
| | | | P.W.3 | 25.09.2025 | 25.09.2025 |
| | | | P.W.4 | 14.05.2026 | 14.05.2026 |
| vii | date of examination of the accused under section 313 of the Code | : | 25.05.2026 | | |
| viii | details of abscondence of an accused and his appearance / production, as the case may be | : | --- | | |
| ix | grant of stay by superior courts and the result thereof. | : | Nil | | |

21) மேற்படி தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணினி மூலம் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு மீண்டும் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 08ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

C UDAYASUNDARAM
Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.07.08 16:05:30 +0530

நீதித்துறை நடுவர் எண் 2,
ஆத்தூர்.

**பின்இணைப்பு:**

**1. அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.த.சா.1 | விமலா |
| அ.த.சா.2 | லட்சுமி |
| அ.த.சா.3 | விக்னேஷ் |
| அ.த.சா.4 | பூங்கொடி |

**2. அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்கள்:–**

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.1 | புகார் மனுவில் உள்ள புகார்தாரர் கையெழுத்து |
| அ.த.சா.ஆ.2 | சமரச மனு |
| அ.த.சா.ஆ.3 | புகார் மனு |
| அ.த.சா.ஆ.4 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.5 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.6 | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.7 | விமலாவின் காயச்சான்றிதழ் |
| அ.த.சா.ஆ.8 | லட்சுமியின் காயச்சான்றிதழ் |
| அ.த.சா.ஆ.9 | விக்னேஷ்–ன் காயச்சான்றிதழ் |
| அ.த.சா.ஆ.10 | திருமண பதிவுச்சான்றிதழ் |
| அ.த.சா.ஆ.11 | 5ம் எதிரி பிரியா என்பவருக்கு ஆண்குழந்தை பிறந்ததற்கான சான்றிதழ் |
| அ.த.சா.ஆ.12 | 5ம் எதிரி பிரியா என்பவருக்கு பிறந்த ஆண்குழந்தையின் பிறப்பு சான்றிதழ் |
| அ.த.சா.ஆ.13 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

3. **அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றுபொருட்கள்:** –

– இல்லை –––

**4. எதிரிகள் தரப்பில் சாட்சிகள், ஆவணங்கள் சான்றுபொருட்கள்:–**

––இல்லை––

**குறிப்பு:**

1. எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.

2. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையிலிருந்தார்கள்.

3. வழக்கின் முடிவு பற்றிய விவரம் காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.07.08 16:05:24 +0530

நீதித்துறை நடுவர் எண்–2,
ஆத்தூர்

Note: CSI Order Uploaded date in 08.07.2026